செ.வெ.எண் /46.

நாள்: 23.11.2017

பத்திரிகைச் செய்தி

தமிழக அரசால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில், 770539 பயனாளிகளுக்கு, 3082156 வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில், 67322 பயனாளிகளுக்கு 67322 கறவை பசுக்களும் 2011-12 முதல் 2017-18 முடிய உள்ள ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மேற்படி திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்ட விபரம் கீழ் வருமாறு:

| வ.எண். | ஆண்டு | திட்டத்தின் பெயர் | குறியீடு | | சாதனை | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2011-12 | விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் | 210 | 840 | 210 | 840 |
| 2 | 2012-13 | | 200 | 800 | 200 | 800 |
| 3 | 2013-14 | | 850 | 3400 | 850 | 3400 |
| 4 | 2014-15 | | 1105 | 4420 | 1105 | 4420 |
| 5 | 2015-16 | | 1628 | 6512 | 1628 | 6512 |

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளின் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 24.11.2017 மற்றும் 25.11.2017 ஆகிய நாட்களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கால்நடைகளுக்கான முகாம் _____ கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர் / நாடாளுமன்ற உறுப்பினர் / சட்டமன்ற உறுப்பினர்கள் / மக்கள் பிரதிநிதி / மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் தொடங்கப்படும்.

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்,
உதகமண்டலம்.